ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/47 - 2024 ජූලි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.07.25

2394/47 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KES/DS/LND/AC/8/5/23.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2019/HW/628.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், பெலென்வத்தை (பிரிவு இல. 4 (பெலென்வத்தை), கெஸ்பேவ நகர சபை எல்லைக்குட்பட்ட) கிராமத்தில் அமைந்துள்ள இல.582பீ, பெலென்வத்தை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கொழும்பு மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.04.02 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. க. வ. 521243 தொகுதி இல. 03, தாள் இல. 1 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0010 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் 02 விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றது.

1. துண்டு இல. 1
காணியின் பெயர்: தெல்கஹகனத்தவத்தை; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஹந்தராகமகே தொன் குமார ஜயலால், இல. 15, மத்தேகொட வீதி, பெலென்வத்தை, பன்னிப்பிட்டி (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0004 ஹெக்டயார்.

2. துண்டு இல. 2
காணியின் பெயர்: தெல்கஹகனத்தவத்தை; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஸ்ரீயந்த தயாநந்த சேனாநாயக்க, இல. 14, மத்தேகொட வீதி, பெலென்வத்தை, பன்னிப்பிட்டி (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0006 ஹெக்டயார்.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கே. பி. பேமதாச,
பிரதேச செயலாளர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ,
2024, யூலை 17.

EOG 07 - 0243

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/96/D/244.
எனது குறிப்பு இல.: DSM/UK/LND/6/2/1-iii தொகுதி.

கீழே உப அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியினை 7 ஆவது கஜபா படையணிக்கு தேவையின் நிமித்தம் அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் இல. 10721/11 மற்றும் 1999.03.26 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மேற்குறிப்பிட்ட காணி மா.1252 மற்றும் 2007.07.31 ஆந் திகதியுடைய திருத்தப்பட்ட வரைபடம் மூலம் துண்டு இல. 37, 38, 39 மற்றும் 40 என உட் பிரிவுக்குட்படுத்தி துண்டு இல. 39 மற்றும் 40 இரு காணித்துண்டுகள் உடைமை நீக்கம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஆதலினால் உப அட்டவணை I இல் விபரிக்கப் பட்டுள்ள துண்டு இல. 1 காணித்துண்டின் கீழே உப அட்டவணை II இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு 37 இனை இதன் பின் காணி எடுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்ளப்படும் என அறியத் தருகின்றேன்.

#### உப அட்டவணை I

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை மெதசியபத்துவில் உக்குவளை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளரின் இல. மா. 1252 மற்றும் 1997.04.30 ஆந் திகதியுடைய வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணி:

**துண்டு இல. 1**
காணியின் பெயர்: உக்குவல வத்த; உரிமை கோருபவர்: அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்; விஸ்தீரணம்: 1.586 ஹெக்டயார்.

#### உப அட்டவணை II

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை மெதசியபத்துவில் உக்குவளை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளரின் இல. மா. 1252 மற்றும் 2007.07.31 ஆந் திகதி திருத்தப்பட்ட வரை படத்தில் துண்டு இல. 37 என்ற கீழ் விபரிக்கப் பட்டுள்ள காணி:

**துண்டு இல. 37**
காணியின் பெயர்: உக்குவல வத்த; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 1.3765 ஹெக்டயார்.

எஸ். எஸ். கே. சேரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
உக்குவளை.

பிரதேச செயலகம்,
உக்குவளை,
2024, யூலை 22.

EOG 07 - 0248

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.